கந்தாடு ஊராட்சிமன்றத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை திரு.கே.எம்.வெங்கடேசன்.,

ந.க.எண்/01/2024 நாள்: .07.2024

பொருள் : மனைப்பிரிவு–விழுப்புரம் மாவட்டம்– மரக்காணம் ஊராட்சி ஒன்றியம் – கந்தாடு ஊராட்சி – கிழக்கு கிராம சர்வே எண்கள் 484/1,485/1A1,மற்றும் ,485/3A1, ல்8.08 ஏக்கர்(அ) 32717 .ச.மீ பரப்பளவில்அமையும் உத்தேசகுடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்டஅனுமதி வழங்கப்பட்டுள்ளது – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் – சார்பு.

பார்வை :

1. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.17.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களின் ந.க.எண் GWDT43PX/2024/TCP Dated 05.07.2024.
3. வேளாண்மை இணை இயக்குநர்,அலுவலகம் விழுப்புரம் அவர்களின் க.எண்.இ2/3829/2022 நாள்: 10.03.2023.
4. தானப்பத்திரம் எண் 2920/2024 நாள்: 21.06.2024.
5. சந்தை மதிப்பு 3% ரூ 72,720/– தமிழ்நாடு அரசு இணையவழி கருவூல செலுத்துச் சீட்டு எண்:202407200006122 நாள்:20.07.2024,
6. கந்தாடு ஊராட்சி மன்றத்தீர்மான எண் 21/2024 நாள்:24.07.2024.
7. கூராய்வு கட்டணம்(ம)களஆய்வு கட்டணம் ரூ.2,35,000/– TNPASS A/C இந்தியன் வங்கி,சைதாபேட்டை, செலுத்து சீட்டு நாள்:25.07.2024.

———

உத்தரவு :

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கந்தாடு ஊராட்சி கிழக்கு கிராம சர்வே எண்கள் 484/1,485/1A1,மற்றும் ,485/3A1, ல்8.08 ஏக்கர்(அ) 32717 .ச.மீ பரப்பளவில்அமையும் உத்தேசகுடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்டஅனுமதி பார்வை 1–ல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் நடவடிக்கையின் வாயிலாக கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு கொ.ஒ.ம.வ/ந.ஊ.இ.(வி.ம) எண்137/2024 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் கடிதம் வரப்பெற்றுள்ளது.

பார்வை 3–ல் காணும் கடிதத்தில் வேளாண்மை இணை இயக்குநர்,அலுவலகம் விழுப்புரம் அவர்கள் மனைப்பிரிவு அமைந்துள்ள இடத்தில் நீர்பாசன வாய்க்கால்,ஆழ்துளை கிணறு எதுவும் இல்லை என தெரிவித்துள்ளார்.

பார்வை 4–ல் காணும் தானபத்திரத்தின் மூலம் மனுதாரர் உள்ளாட்சி துறைக்கு ஒப்படைக்க வேண்டிய குடியிருப்பு மனைப்பிரிவின் பொது ஒதுக்கீடுகளான பூங்கா மற்றும் சாலைகள் ஆகியவை உள்ளாட்சிக்கு தானபத்திர எண் 2920/2024 நாள்: 21.06.2024.–ன் படி ஊராட்சி மன்றத்தலைவர் கந்தாடு என்ற பெயருக்கு மாற்றம் செய்துள்ளார்.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் பெயரிடப்படாத மனைகளுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்."

2. சொத்தினை வாங்கவிரும்பும் எந்தநபரும் விண்ணபதாரருக்குசொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.மேலும் அதன் மேல் வேறுயாரோனும் தனிநபர் உரிமைகோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ளநீதிமன்றத்தின்மூன் தீர்த்துகொள்ளவேண்டும்.
3. இம்மனைப்பிரிவில் கட்டணங்கள் தொடர்பாகஏதேனும் தணிக்கைத்தடைஏற்படின் அதற்கான இழப்பீட்டுத் தொகையைமனுதாரரிடமிருந்துவசூலிக்கப்படும்.
4. மனைப்பிரிவில் அமைந்துள்ளபொதுஉபயோகபகுதியைஅதன் நிலையில் நிலைநிறுத்தப்படவேண்டும்.

5. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் விதிமுறைப்படி எல்லைகற்களால் வரையறுக்குப்படவேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டுமனுதார்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலததிற்கும் அமைகக்பபடவேண்டுஅதோடு தகுந்தமழைநீர் வடிகால்,துப்புரவு தெருவிளக்கு முதலியவசதிகளும் மனுதாரர் அமைத்து தரவேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோஅல்லதுவரையறுக்கப்பட்டபொதுஉபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

தலைவர்
ஊராட்சி மன்றத்தலைவர்,
கந்தாடு ஊராட்சி
விழுப்புரம் மாவட்டம் – 604 303.

பெறுதல் :

M/S. GT BHARATHI URBEN DEVELOPERS PRIVATE LIMITED
No 81,83(31&32) Dr.Alagappa Road,
Puraisaiwakkam Chennai-600 084